பெரிய தடாற்கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை.

மலர்: 7 | 1963, யூலை 3 ந் திகதி | இதழ்: 15

இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்து

இரண்டாம் முறையும் பெற்றுக் கொள்ளுதல் அவசியம்

இளம்பிள்ளை வாத நோய் ஏற்படக்கூடிய 3 மாதமுதல் 8 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கு இந்நோயேற்படாமல் தடைசெய்வதற்காக இவ்வாண்டு மே மாதம் 20 ந் தேதியன்று தேசீய இளம்பிள்ளைவாத நோயணுகாமற்றடை செய்யும் இயக்கம் ஆரம்பமாயிற்று. இந்த வயதுக் குழுவில் 24,37,840 பிள்ளைகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. சுமார் 10 நாட்களுக்குள் இத்தொகையின் 80 சதவீதமான பிள்ளைகளுக்கு நோயணுகாமற்றடை செய்தலே இவ்வியக்கத்தின் இலக்காக இருந்தது.

தொண்டர்கள், பத்திரிகைகள், பல்வேறு பகுதி உத்தியோகத்தர்கள், உள்ளூர் அதிகாரிகள் ஆகியோர்களிடமிருந்து சௌக்கிய உத்தியோகத்தர்கள் பெறக்கூடியதாகவிருந்த ஆதரவிலேயே இவ்வியக்கத்தின் வெற்றி பிரதானமாகத் தங்கியிருந்தது. பிள்ளைகளின் நலன்களில் அக்கறையுள்ள அனைவரிடமிருந்து எமக்குக் கிடைத்த தீவிரமான ஆதரவைத் தவிர ஒரு ஸ்ட்சம் தொண்டர்களுக்குமேல் இவ்வியக்கத்தில் எமக்கு உதவிபுரிவதற்குமிருந்தார்கள் என்பதைக் காணும்போது திருப்தியேற்படுகிறது.

இந்நோயணுகாமற்றடை செய்த பிள்ளைகளின் தொகைபற்றிய விபரங்கள் இப்போது கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன. இவ்வியக்கத்தின்போது 19,19,292 பிள்ளைகள் நோயணுகாமற்றடை செய்யப்பட்டனர். இந்நோய்த்தடை மருந்து கொடுக்கப்பட்ட பிள்ளைகள் நூற்றுக்கு 78·7 சதவீதமாகும். விசேடமாக தடை மருந்து கொடுத்துக்கொண்டிருக்கும் காலத்தின்போது நிலவிய பாதகமான காலநிலையில் இவ்வளவு பிள்ளைகளுக்கு இம்மருந்தைக் கொடுக்கக்கூடியதாக இருந்தது, திருப்தியளிக்கும் ஒரு மாபெரும் சாதனையாகும். எந்த ஒரு பொதுச் சௌக்கிய முயற்சியின் வெற்றிக்கும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்களின் தீவிரமான ஆதரவு அவசியமென்பதையும் அதை அவசியம் பெறவேண்டுமென்பதையும் இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இவ்வியக்கம் ஆரம்பமாவதற்கு முன்பு நடைபெற்ற விரிவான சௌக்கியக் கல்வி நிகழ்ச்சிகள் இந்நாட்டு மக்கள் இந்த இயக்கத்துக்குத் தீவிரமான ஆதரவை நல்குவதற்குப் பெரிதும் பொறுப்பாக இருந்தனவென்பதில் ஐயமில்லை. இந்நோயேற்படக்கூடிய வயதுக் குழுவிலுள்ள அனைவருக்கும் ஒரு குறுகிய காலமான பத்து நாட்களுக்குள் இந்நோய்த்தடை மருந்தைக்கொடுத்து இந்நோயணுகாமற்றடைசெய்வதற்கு உலகிலுள்ள எந்த ஒரு நாடும் இதுவரை எத்தனித்ததில்லை.

இந்நோய்த்தடை மருந்தை இரண்டாவது தடவையாகக் கொடுக்கும் இயக்கம் இவ்வாண்டு ஜூலை மாதம் 15 ந் திகதியிலிருந்து ஆரம்பமாகிறது. முதலாவது தடவை இம்மருந்தைக் கொடுத்த போது எமக்குக் கிடைத்த அதேயளவு ஆதரவு இம்முறையும் கிடைக்குமென்பதிலும் இந்த இயக்கம் மீண்டுமொரு தடவை வெற்றியீட்டுமென்பதிலும் நம்பிக்கையுண்டு, எமக்கு. முதல் தடவை மட்டும் இந்நோய்த்தடைப்பாலை உட்கொண்ட பிள்ளைகள் இரண்டாவது

(3 ம் பக்கம் பார்க்க)

பேராதனைப் பல்கலைக்கழக தகோபாவுக்கென தாய்லந்திலிருந்து கொண்டுவரப்பட்ட அரகத் புனித சின்னங்கள் மாளிகாகந்தை மகாபோதி சங்க மண்டபத்தில் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டன. பிரதம மந்திரி கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்கா அச்சின்னங்களுக்கு மலர் வைத்து வழிபடுவதைப் படத்தில் காணலாம்.

உடவளவைத் திட்டம்

ஜூலை 12 ந் தேதி அங்குரார்ப்பணம்

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு இவ்வருடம் ஜூலை மாதம் 12 ந் தேதியன்று பிரமாண்டமான உடவளவை பல் நோக்குத் திட்டத்தை அங்குரார்ப்பணஞ் செய்தற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. பாரமான மண் இழுப்பு இயந்திரங்களையும் தொழிற்சாலையையும் கொண்ட கல்லோயா அபிவிருத்திச் சபைப் பிரிவு, உடவளவை நீர்த்தேக்கத்திட்டத்தில் வேலையை ஆரம்பித்தற்கென ஜூலை மாதம் 10 ந் தேதியன்று மட்டக்களப்பு மார்க்கமாக வளவை ஆற்றுப்படுக்கைக்கு இடம் பெயரத்துவங்கும். வேலை அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்படுதற்கு முன் கதிர்காமத்தில் நடைபெறவிருக்கும் விசேஷ பூசையில் காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரும் முதலாவதாகச் செல்லும் தொழிலாளர் கோஷ்டியினரும் பங்கு பற்றிக் கொள்வர். அங்குரார்ப்பண வைபவம் ஆரம்பமாவதற்குமுன் வேலைத் தளத்தில் புத்தபிக்குகள் பதினைந்துபேர் பிரித் ஓதுவார்கள்.

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரின் சிபார்சின் பேரில் உடவளவை நீர்ப்பாசன, நீர்மின்சக்தித் திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்தது. மின்சாரக் கம்பி இணைப்புகள், 50,000 ஏக்கருக்கதிகமான புதிய நெற்காணிகளுக்கும் 33,334 ஏக்கர் மேட்டு நிலத்துக்கும் நீர்ப்பாசன வசதியளித்தல் முதலியன உட்பட இத்திட்டத்தின் மொத்தச் செலவு 13,50,00,000 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்லோயா பள்ளத்தாக்கில் நடப்பு நிதி வருடத்தில் தனது வேலைத் திட்டத்தை பூர்த்தி செய்துகொள்ளவிருக்கும் கல்லோயா அபிவிருத்திச் சபையின் பயிற்சி பெற்ற ஊழியர்களையும் உபகரணங்களையும் பயன்படுத்திக் கொள்ளுதற்காகவே இத்திட்டத்துக்கு சீக்கிரமே நிதி ஏற்பாடு செய்யப்படவேண்டுமென காணி அமைச்சர் சிபார்சு செய்தார்.

(3 ம் பக்கம் பார்க்க)

குடிசன மதிப்புத் தினம்

வித்தியா பகுதி அறிக்கை

1963 ம் ஆண்டின் குடிசன மதிப்பெடுக்கும் கடைசி தினமாகிய ஜூலை மாதம் 8 ந் திகதி திங்கட் கிழமையன்று பாடசாலைகளை பிற்பகல் 1 மணிக்கு மூடும்படி பாடசாலை அதிபர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்களென வித்தியா பகுதி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியொன்று கூறுகின்றது.

அரசகரும மொழி

அமைச்சரவைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை

"சில பகுதிகளிலும் அரசாங்கத் தாபனங்களிலும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அமுல்நடத்தல் ஏற்ற முறையில் அனுசரிக்கப்படவில்லையென்று அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சரவைச் செயலாளர் 26.6.63 ல் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது. அச்செய்தியில் மேலும் காணப்படுவதாவது :—

"ஆகவே, 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந்திகதி முதல் அரசகருமங்களைச் சிங்கள மொழியில் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுக்குமாறு பகுதித் தலைவர்களை அரசாங்கம் பணிக்கிறது.

இக்குறிக்கோளை எய்துதற்கு இப்போது கிடைக்கக்கூடியதாகவிருக்கும் சிங்களத்தில் தேர்ச்சியுள்ள பதவியினரை பகுதித் தலைவர்கள் நன்கு பயன்படுத்தவேண்டும்.

அரசாங்கப் பகுதிகளில் அரசகரும மொழியில் கருமமாற்றப்படுவதைப் பரிசீலனை செய்யும் உத்தியோகபூர்வமான செயற்குழுவின் ஆலோசனையுடன் தேவையான சுற்றறிக்கையைப் பகுதிகளின் தலைவர்களுக்கு வெளியிடுமாறு திறைசேரிச் செயலாளர் பணிக்கப்பட்டார்.

மலரும் மாலையும்

டாக்டர் தனிநாயக அடிகள்

தென்நாட்டு மக்கள் மலர்களையும், மாலைகளையும் மிகுதியாய் விருப்புற்றுத் தம் வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வந்தனர் எனும் உண்மையைப் பிறநாட்டார் பலர் குறித்துள்ளனர். அப்துல் ரசாக் விசய நகரத்தைக் குறித்து விரித்துரைக்கும்பொழுது, அந்நகரின் மக்கள் மலர்களைப் பெரிதும் விரும்புகின்றனர் எனவும், அந்நகரின் பல இடைகளில் பூக்கடைகள் பரவியிருக்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார். காளிதாசரின் இயற்கை ஈடுபாட்டையும் அவர் தம் நாடக பாத்திரங்கள் மலர்களையும் இலைகளையும் கையாளும் முறையையும், அவர் உவமைகளைக் குறிப்பிடும் திறத்தையும் நோக்குமிடத்து, அன்னார் ஐந்திணை இலக்கியத்தையும் தமிழ்ப் புலவர் செய்யுட்களையும் அறிந்திருப்பாரோ என்னும் கேள்வி எழுகின்றது. அவரும் தமிழ்நாட்டு மக்கள் மலர்கள்மீது வைத்த அன்பினைக் குறிப்பிட்டுள்ளார்.

தென் நாட்டில் மட்டுமே அன்றி, மேற்றிசையிலும் நாகரிக மக்கள் ஆகிய கிரேக்கர், உரோமர் முதலியோர் தம் வழிபாட்டு முறையிலும், தம்மை அணிசெய்யும் வகையிலும், மலர்களைப் பெரிதும் பயன்படுத்தினர். வேள்விக்குரிய காளைகட்கும், பிற விலங்குகட்கும், மாலை இட்டே வேள்வி செய்தனர். விருந்தினர் கண்ணி சூடியே விருந்துண்டனர்.

மரதன் பந்தய ஓட்டத்தில் வெற்றி பெற்றதற்கு அடையாளமாக இலைகளால் ஆக்கிய முடி ஒன்றையே கிரேக்கர் சூட்டினர். இன்றும் மேல் நாடுகளில் பலர் மலர்கள் மீது அன்பு பூண்டு அவற்றினை மிகுதியாய் போற்றி அழகுறக் கையாண்டு வருகின்றனர். ஆயினும், சங்க காலத்தில் தமிழ் மக்கள் அவற்றை வாழ்க்கையில் பல துறைகட்குப் பயன்படுத்தியவாறு வேறு எம் மக்களும் பயன்படுத்திலர். பொதுவாகப் பசுபிக் தீவுகளிலும் சிறப்பாக ஹவாய்த் தீவுகளிலும், பொலினீசிய மக்கள், தமிழ் மக்களைப் போன்று, கோதையும், தாரும், கண்ணியும், தழையுடையும் அணியும் பழக்கமுடையவர் எனத் தோன்றுகின்றது. அப்பழக்க வழக்கங்களினால், அன்னார் இந்தியாவின் தென் நாட்டிலிருந்து ஆங்குக் குடியேறிய மக்கள் என்பதற்குப் பெரியதொரு சான்று தோன்றுதலும் கூடும்.

உலக இலக்கியங்களைப் பயில்பவர் வெர்ஜில், வோர்ட்ஸ்வொர்த் போன்ற மேல் நாட்டுப் புலவர்களின் இயற்கை ஈடுபாட்டைப் பெரிதும் போற்றுகின்றனர். பேராசிரியர் ரைடர் என்பவர் காளிதாசரின் மேகதூதத்தைப் பற்றி ஆராயும்பொழுது அச்சிறு காவியத்தில் தோன்றும் இயற்கை ஈடுபாடு பிற இலக்கியங்கள் எவற்றிலும் இல்லை என வியந்து வற்புறுத்துகின்றார். அன்னார், கபில பாணர் போன்ற தமிழ்ப் புலவர் இலக்கியங்களைக் கண்டிருப்பரேல் மேகதூதத்தைப் பாற்றி அவ்வாறு கூறியிரார். ஏனெனில் வரலாற்று முறைமைக்கு எட்டாத காலந் தொட்டே தமிழ் மக்கள் நிலத்தை ஐந்திணையாகப் பிரித்து, நிலத்தின் இயற்கையே பண்பாட்டின் அடிப்படை என உணர்ந்திருந்தனர். லெப்லே எனும் மக்கள் இயல்வல்லுநர் கூறிய இவ்வுண்மையை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மக்கள் இனிதுணர்ந்துள்ளார்கள். அத்திணைகட்கு அவர் இட்ட பெயர்கள் அவரது இயற்கை அன்பினை நன்கு தெளிவுறுத்துகின்றன. நாகரிகமற்ற மக்கள் நிலங்கட்குப் பெயரிடுவாராயின், அந்நிலங்களில் தோன்றும் பயிர் அல்லது உணவுப் பொருள் பற்றிய பெயரே இடுவர். அவ்வாறு செய்தார் அல்லர் பண்புடைப் பண்டைத் தமிழ் மக்கள். மலை, மலை சார்ந்த இடம், இவற்றிற்கு அவர் இட்ட பெயர் குறிச்சி, குறிஞ்சி என்பது பன்னீராண்டுகட்கு ஒருமுறை மலைப்பக்கங்களில் பூக்கும் ஒரு செடி. நீலகிரி, பழனி மலைகளில் அதனைக் காணலாம். அச்செடி பூக்கும் காலத்தில், மலைச்சாரல் எல்லாம் ஒரே நீல நிறமான பூக்கள் நிறைந்து மிகவும் அழகுடையதாக விளங்கும். அப்பூக்களில் மிகுதியான தேன் கிடைக்கும். அதனைப் பெருந்தேன் என்பர். குறுந்தொகை மூன்றும் பாட்டில்,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

எனச் சங்கப் புலவர் கூறியிருத்தல் காண்க. தொல்காப்பியரது காலத்திற்குப் பன்னூற்றாண்டுகள் முற்படத் தமிழ் மக்கள் மலை நிலத்திற்குக் குறிஞ்சி நிலம் எனப் பெயர் இட்டனர். அதற்கு எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்னர் குறிஞ்சிச்செடி மலை நிலத்திற்கு மிகச் சிறப்பாகிய கருப்பொருள் எனக் கருதி அவர் ஆராய்ந்திருத்தல் வேண்டும்? அவர் நுண்ணறிவுதான் என்னே!

அவ்வாறே பிற நிலங்கட்கும் முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டனர். பாலை என்னும் வடிவங்கொண்ட நிலத்திற்குப் பாலை எனப் பெயரிட்ட செயலும், அவரது பேராற்றலை உணர்த்துகின்றது. ஈழ நாட்டின் காடுகளில் பாலை மரம் மிகுதியாய் வளர்ந்து கோடைப் பருவத்தில் மாவும், மக்களும் விரும்பி உண்ணும் பழங்களை நல்குகின்றன. பழைய உரைகாரருள், உரை ஆசிரியர் எனப் பிறப்புப் பெயர் பெற்ற இளம் பூரணர் ஒருவரே பாலை மரத்தைப் பற்றிக் கூறியுள்ளார். அவர் கூறுவதாவது :—"பாலை என்பதற்கு நிலம் இன்றேனும் வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் இலையும் வாடுதல் இன்றி நிற்பதாம். பாலை என்பதொரு மரமுண்டாதலின், அச் சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார் என்பது".

முல்லை நிலத்திற்கு முல்லை மலர் அடையாளமாக இருப்பதுடன், அது கற்பு என்னும் பண்பினைக் குறித்தற்குப் பெரிதும் பொருந்திய பூவாக விளங்குகின்றது. "முல்லை சான்ற கற்பினள்" எனவும், "முல்லை நாறும் கதுப்பினள்" எனவும், அன்றோர் செய்யுட்களில் வருதல் காண்க. மேல் நாட்டினர் லிலி மலரைப் போற்றியது போல், தமிழ் நாட்டினர் முல்லை மலரைப் போற்றினர்.

தமிழ்ப் புலவர் இயற்கையை நன்றாகப் பயின்ற பின்னரே செய்யுள் செய்யத் தொடங்கினர். ஐந்திணை நிலம், பெரும் பொழுது, சிறுபொழுது என்னும் இயற்கை வனப்பு, அவர் அகப்பாடல்கட்கு இன்றியமையாத பின்னிலைக்களனாய் விதிக்கப்பெற்றன. பிற இலக்கியங்களில் இத்தகைய கோட்பாடுகள் இருக்கக் காண்கிலேம்.

சங்கப் பாடல்களில் மட்டுமன்றிச் சிறிய வரிப்பாடல்களிலும், தமிழ்ப்புலவர்களின் சிறந்த இயற்கை ஈடுபாடு தோன்றக் கிடக்கின்றது. சிலப்பதிகாரத்தில்,

"பூவார் சோலை மயில் ஆடப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர்மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி!
காமர்மாலை அருகசைய
நடந்த வெல் லாம் நின்கணவன்
நாமவேலின் திறம்கண்டே
அறிந்தேன் வாழி காவேரி."

என்னும் காணல் வரியில் காவிரியாறு பூவணிந்து, பூமாலையும் தலையுடையும் புனைந்து செல்லும் காட்சியை, சிறிய எளிய இனிய செந்தமிழ்ச் சொற்களில் பேரழகு மிக்க ஓவியமாகத் தீட்டியுள்ளார்.

தமிழர் தம் இறைவாழிபாட்டு முறையில் மலர்களையும், மாலைகளையும் இயற்கை வனப்பையும் கையாண்டு வந்தனர். மலர்களால் வழிபடும் முறை திராவிட முறை எனக் கூறுவாருமுளர். வைதிக வழிபாட்டில் மலர் வழிபாடு இல்லை என்பதும், ஆரியர் திராவிடரிடமிருந்தே மலர் வழிபாட்டு முறையைக் கற்றனர் என்பதும் அவர் துணிபு. பூஜை எனும் வடசொல் "பூசெய்" எனும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்பாருமுளர். அதற்குத் தக்க சான்றுகளுள. பூவழிபாடு வேதகாலத்தில் இல்லாமையானும், பூஜை எனும் அடிச்சொல் இந்தோ ஐரோப்பிய மொழிகளில் காணாமையானும், பூஜை திராவிட மக்களின் தனிப் பண்பாட்டிற்கு இசைந்தது என்று நம்புதற்கு இடமுண்டு.

முருகன் வழிபாடு இயற்கையுடன் கலந்த வழிபாடு. அவன் விரும்பும் இடங்கள் யாவையெனின் இயற்கை வனப்புத் தோன்றும் இடங்கள் அனைத்துமேயாம். திருமுருகாற்றுப் படையில்,

"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்"

அவன் உறைந்திருப்பான் என நக்கீரர் கூறுகின்றார். அவனை வழிபடுவோர் சிவந்த மலர்கள் கொண்டே வழிபட்டு வந்தனர். கடம்ப மாலை அணிபவன் அவன். வெட்சி மாலையும் விரும்புவான். அவனை வழிபடும் ஆடவரும் மகளிரும் அவனைப்போல் சிவந்த மலர்களை அணிந்து வந்தே வழிபடுவார். இவ்வாறே, முல்லை நிலத்தில் திருமாலை முல்லை மலர் கொண்டு வழிபட்டு வந்தனர். நிலத்தின் தெய்வத்தை வழிபடுதற்கு நிலத்தில் தோன்றிய மரஞ் செடிகளின் மலர்களையும் தழைகளையும் வழங்கினர்.

தமிழ்ப் புலவர் தம் பாடல்களில் தலைவர், தலைவியர் மலர்களை மிகவும் விரும்பினர் எனக் காட்டியுள்ளார். தலைவன் தன் தலைவிக்குக்கையுறையாகக் கொடுப்பது மலர்களேயாகும். தலைவி தன் தோழியருடன் மலர்களைக் கொய்யும் தொழிலிலே பொழுதுபோக்குவாள். தன் இல்லத்தில் அயலைச் செடியை வைத்து நீர்வார்த்து வளர்த்து வருவாள். இவ்வாறு தலைவர் தலைவியர் ஈடுபாடு மக்களின் ஈடபாடாய் இருந்தது.

தமிழ்ச் சிறுவர் தாம் பிறந்த நாள் தொடங்கி மலர்கள் மீதே நாட்டம் கொண்டிருந்தனர். போர் வீரன் தன் மனைவி ஆண் மகவைப் பெற்றவுடனே போர்க்குரிய மாலைகளைச் சூடி வந்து தன் குழந்தைக்கு முதற் காட்சி அளிப்பான். இக்காலத்திற்போலவே, அக்காலத்திலும் சிறுவர்க்கு முடியில் மலர்களைச் சூடும் வழக்கம் இருந்தது. சிறுவர் பூக்கள், பழங்கள், விதைகள் வைத்து விளையாடினர். ஆடைகளுடன் மாலைகளும் அணிந்தனர். தலையில் அணியும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். கழுத்தில் அணியும் மாலைக்குத் தார் என்று பெயர். புறநானூற்றில்,

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பில் தாருங் கொன்றை"

என்பது காண்க. ஆடவர் அணிவது தார், பெண்டிர் அணிவது கோதை, இவ்வேறுபாடும் அறிக. காதிலும் சிறு மாலைகளைத் தொங்க விட்டனர். பெண்டிர் தழைகளால் தொடுக்கப்பெற்ற ஆடை அணிந்தனர். இம்மாலைகளும், ஆடைகளும் ஒரேவகையான பூவினாலும் தழையினாலும் செய்யப்பெற்றன. பல வகைப் பூக்களும் தழைகளும் விரவிச் செய்யும் மாலைகளும் உடைகளும் வழங்கின.

தமிழர் தம் இல்லங்களை இயற்கை வனப்பு வாய்ந்த இடங்களில் நிறுவினர். தம் நகரங்களில் பல பூம் பொழில்களையும், தோட்டங்களையும் இளமரக்காவுகளையும், இனிய சோலைகளையும் வளர்த்தனர். இல்லங்களின் முன்னர் அழகிய பந்தர்கள் அமைத்தனர். இறையனார் அகப்பொருள் உரையில் அழகுறக் கூறப்பெற்ற இல்லமும், பொழிலும் இக்காலத்து வனப்பினைக்காட்டுகின்றன. களவொழுக்கம் நிகழும் இடங்கள் எல்லாம் இயற்கை வனப்புமிக்க இடங்களாகவே தோன்றுகின்றன. சங்கச் செய்யுட்களில் தலைவன் தலைவியை முதன் முதல் எதிர்ப்படும் இடம், அவள் தன் தோழியருடன் வேங்கை மலர் கொய்து விளையாடும் இடம் எனவே காட்டப்பெற்றுள்ளது. வேங்கைமலர்கள் புலியின் நிறத்தை ஒப்பன. எனவே, "புலி! புலி!!" எனப் பூசலிடின் வேங்கை மரம் தன் கிளைகளைத் தாழ்த்தி மலர்களைக்கொடுக்கும் என்பது சிறுவனின் நம்பிக்கை. வேங்கை மலர்கள் குறிஞ்சி நிலத்திற்குரிய அழகிய மலர்கள். வேங்கை மரம் பூக்கும் பருவம் திருமணம் நிகழ்த்துதற்குரிய காலம் எனக் கருதப்பெற்றது. பண்டைத் தமிழ் மக்கள் வேங்கை மரத்தின் நறுநிழலில் திருமணம் நிகழ்த்தி வந்தனர் என்பதற்குப்போதிய சான்றுகள் உள்ளன. வேங்கை பூக்கத் தொடங்கியவுடன், வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிந்து சென்ற தலைவர் தம் நாடு திரும்பி வந்து தம்மை மணந்து கொள்வர் எனத் தலைவியர் எதிர்நோக்கியிருப்பர். குறுந்தொகைப் பாட்டு ஒன்றில் கண்ணீர் சொரிந்தாள் எனப் புலவர் ஒருவர் கூறியுள்ளார். ஏனெனில் அவளது தலைவன் அதுகாறும் வந்திலன்.

வேங்கை மலர்களை தலைவர் தலைவியர்க்குக் கையுடையாக நல்குவார். அவர் கூந்தலை அம்மலர்களால் அணி செய்வர். அவர் தமக்குள்ளே அம் மலர் மாலைகளை மாற்றிக் கொள்வர். தழையுடைகளைக் கையுடையாக வழங்கும் வழக்கமும் இருந்தது. காதலி தன் காதலனை மட்டுமே அன்றி அவன் மலைகளையும், மலைகளில் தவழும் முகில்களையும், மலைகளினின்று இழியும் அருவிகளையும், அருவி வெள்ளத்தில் மிதந்து வரும் செடி கொடி மலர்களையும் காதலிப்பாள். காதலி ஒருத்தி, ஒரு மாலைப்பொழுதில் தன் காதலனின் மலையில் மழை பெய்வது கண்டாள். மறுநாள் வைகறைப் போதில் மழை வெள்ளத்தில் காந்தட் செடி ஒன்று கிழங்குடன் பெயர்ந்து மிதந்து வருதல் கண்ணுற்றாள். அச் செடியினை மகிழ்ச்சி பொங்க இரு கையினாலும் ஏந்தி எடுத்தாள். மார்போடு அணைத்தாள். ஆர்வம் தோன்ற முயங்கினாள். அவ் வெப்பத்தினால் இலைகள் வாடின ஆயினும், அதனைக் கிழங்குடன் தன் முற்றத்தில் நட்டு, நாடோறும் கருத்துடன் நீர் வார்த்து, அன்புடன் வளர்த்து வந்தாள். இச் செய்தி குறுந்தொகை 361 ம் பாட்டில் சுருங்கச் சொல்லல் முதலிய பல்வகை அழகு நயந்தோன்றக் கூறபெற்றுள்ளது.

திருமண நிகழ்ச்சியில், தமிழ் மக்கள் மணமக்கள் மீது மலர்களைத் தூவி வாழ்த்துவர். தம்மூர்க்குப் புதிதாய் வந்த விருந்தினரை அவ்வூர் மக்கள் மலர் கொய்து கொடுத்து வரவேற்பர். புலவரும், கூத்தரும், பாணரும் அரசர் பாற் செல்லும்பொழுது அவர் அவர் கட்கு நாடும், ஊரும், களிறும் பரிசிலாக நல்குவதுடன், பொன்னால் செய்த தாமரைப் பூவும் அளிப்பர். சிலவேளைகளில்

(4 ம் பக்கம் பார்க்க)

முடிக்குரிய காணிகளைப் பராதீனப்படுத்தல்

முடிக்குரிய காணிகளை விரைவாகப் பராதீனப்படுத்தி காணியற்ற குடும்பங்களை பல்வேறு குடியேற்றத்திட்டங்களில் குடியேற்றுவதன் மூலம் விவசாயிகளின் காணி வேட்கையைத் தீர்ப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது, நில, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு.

பெரிய குடியேற்றத்திட்டங்கள் :

பெரிய குடியேற்றத்திட்டங்களின் கீழ் இப்போது சுமார் 7,000 ஏக்கர் நெற் காணியிலும் சுமார் 5,000 ஏக்கர் மேட்டு நிலத்திலும் ஏறத்தாழ 2,350 குடும்பங்களைக் குடியேற்றும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அத்துடன் பதவியாவில் 750 குடும்பங்களையும் நமல் ஓயாத் திட்டத்தின்கீழ் 433 குடும்பங்களையும் குடியேற்றுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இக் குடியேற்றத்தில் சுமார் 17,500 ஏக்கர் நிலம் பராதீனப்படுத்தப்படும்.

இதேமாதிரியானதொரு பராதீனப் படுத்தும் திட்டம் 1963/64 இலும் இடம் பெற்றுள்ளது.

மேட்டுநிலக் குடியேற்றத்திட்டங்கள் :

தேயிலை மேட்டு நிலக் குடியேற்றத் திட்டங்களில் சுமார் 500 குடும்பங்களைக் குடியேற்றும் வேலையும் நடைபெற்றுவருகின்றது. காலி, மாத்தறை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் இத்திட்டம் இடம்பெறுகிறது.

தெங்கு மேட்டு நிலத் திட்டங்களில் சுமார் 500 குடும்பங்களைக் குடியேற்றும் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தேயிலை மேட்டுநில குடியேற்றத்திட்டங்களிலுள்ள குடியேறியொருவருக்கு தேயிலைப் பயிர் செய்வதற்கு 2 ஏக்கர் நிலமும் தனக்கொரு வீட்டுத் தோட்டமொன்றமைப்பதற்கு ¼ ஏக்கரிலிருந்து ½ ஏக்கர் வரை நிலமும் கொடுக்கப்படுகின்றன. தெங்குத் திட்டத்திலுள்ள குடியொருவருக்கு 5 ஏக்கர் நிலம் கொடுக்கப்படுகின்றது. இதில் அவர் 4 ஏக்கர் நிலத்தில் தென்னை பயிரிட்டு மிகுதியான ஒரு ஏக்கரைத் தன்னுடைய வீட்டுத் தோட்டமாக அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறார். வீட்டுத் தோட்டத்தில் அவர் வர்த்தகப் பயிர்களான மிளகாய், வெங்காயம், நிலக்கடலை, புகையிலை போன்றவற்றையும் பயிரிடலாம்.

1963/64 ஆம் ஆண்டில் தேயிலைத் திட்டங்களில் 1,000 குடும்பங்களையும் தெங்குத் தோட்டங்களில் குறைந்த பட்சம் 500 குடும்பங்களையும் குடியேற்றுவதே அமைச்சின் திட்டமாகும்.

தேயிலைத் திட்டங்கள் தொடர்பாக, மாத்தறை மாவட்டத்திலுள்ள களுபோவிற்றியானேயில் தேயிலைத் தொழிற்சாலையொன்றின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிடல் பொருந்தும். பிரதானமாகக் குடியேறிகளிடமிருந்து பெறும் தேயிலையைக் கொண்டு இத்தொழிற்சாலை வருடாந்தம் 1,500,000 இறுத்தல் பக்குவப்படுத்தப்பட்ட தேயிலையை உற்பத்திசெய்யும். அண்மையில் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட தெல்கொடை தேயிலைத் தொழிற்சாலையின் அமைப்பிலேயே இத் தொழிற்சாலையும் நிர்மாணிக்கப்படும்.

கிராம விஸ்தரிப்புக்குத் தோட்டங்களைக் கொள்வனவு செய்தல் :

கிராம விஸ்தரிப்புக்குத் தோட்ட நிலங்கள் கொள்வனவு செய்யப்படுகின்ற திட்டத்தின்கீழ், வெள்ளம், நிலச் சரிவு, கடலரிப்பு முதலியவற்றால் பாதிக்கப்படுகின்ற மக்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிலங்களைக் கொள்வனவு செய்வதற்கான சகல முயற்சிகளையும் காணி அமைச்சு மேற்கொள்ளும்.

கிராம விஸ்தரிப்புத் திட்டங்கள் :

1961/62 ஆம் நிதியாண்டில் கிராம விஸ்தரிப்புத் திட்டங்களின் கீழ் 74,718 குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர். இதே மாதிரியான திட்டங்கள் தற்போது இடம் பெற்று வருகின்றன. அடுத்த நிதியாண்டின்போது கிராம விஸ்தரிப்புத்திட்டங்களின் கீழ் 6,000,000 ரூபா செலவில் மேலுமதிகமான குடும்பங்கள் குடியேற்றப்படும். வீடுகளை நிர்மாணித்தல், கிணறுகளைத் தோண்டுதல், மண் பாதுகாப்பு முறைகளுக்கு உதவி செய்தல், விவசாயிகளின் குடில்களுக்கு நிரந்தரமான கூரை அமைத்தல், வீதிகளை நிர்மாணித்தல் முதலியவற்றுக்கே இத்தொகை செலவாகும்.

மேற்கூறிய திட்டங்கள் யாவும் காணிக் கொமிஷனர் பகுதியின் நடவடிக்கைக் குட்பட்டன.

பொரளையிலுள்ள ஆயுர்வேத பகுதியில் நடைபெற்ற ஆயுர்வேத கூட்டுச் சபைக் கூட்டத்தில் அல்-ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

வாடி வீடுகள்

அரசாங்க சுற்றுப் பயணத்தார் பணியகம் வாடி வீடுகளைக் கட்டித் திருத்தும் திட்டத்தில் இப்பொழுது ஈடுபட்டுள்ளது. உருகுணை தேசியச் சோலையையடுத்துள்ள அனமதுவையில் புதிய வாடிவீடு ஒன்று கட்டப்பெறும். ஹிக்கடுவை, திசைமாறுமை வாடிவீடுகள் திருத்திக்கட்டத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. எல்ல, பெலிகுல ஓயா வாடி வீடுகளில் மேலதிக அறைகள் கட்டப்படும். சினிமாப்படம் ஒன்று தயாரித்த காலத்தில் உலகப் புகழ் ஈட்டிய சித்துல்கல வாடிவீட்டுக்கும் முக்கிய திருத்தங்கள் இப்பொழுது செய்யப்படுகின்றன.

சுற்றுப்பயணத்தார் பணியகம் மொத்தம் 108 அறைகள் கொண்ட 16 வாடிவீடுகளைப் பரிபாலித்து வருகின்றது. கடந்த வருடம் எதிர்பார்க்கப்பட்ட 75,000 ரூபா நட்டத்துக்குப் பதிலாக ரூபா 4,800 நட்டம் ஏற்பட்டது. விடுதி வாடகைக் கட்டணம் குறைவாக அளவிடப்பட்டதால் ரூபா 6,000 கழித்துவிடப்பட்டது. இதனையும் கணக்கிட்டால் ரூபா 2,000 கடந்த வருடம் இலாபமாகக் கிடைத்திருக்கும். இயக்கச் செலவுகள் மிகவும் குறைக்கப்பட்டன.

கடந்த நிதி வருடத்தில் எட்டு வாடி வீடுகள் இலாபம் ஈட்டின. அவையாவன : ஹிக்கடுவை, திசைமாறுமை, திசைவேவ, நுவரவேவ, அம்பேபுசை, ஹபரணை, புசல்லாவ, பொலநறுவை என்னும் எட்டுமாம். மொத்த விற்பனவு 1958 ல் ரூபா 58,000 ஆகும். ஆனால் இத்தொகை 1962 ல் ரூபா 255,000ஆக அதிகரித்தது.

அடுத்த பருவகாலத்துக்கு இப்பொழுதே ஹிக்கடுவை வாடி வீட்டில் இடம் ஒதுக்கும்படி கோரிக்கைகள் கிடைத்துள்ளன. பொலநறுவை, திசைமாறுமை வாடி வீடுகளிலும் இடம் ஒதுக்கும்படி அநேக கோரிக்கைகள் வந்தவண்ணமிருக்கின்றன.

நடப்பு நிதி வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் வாடிவீடுகளை நடத்துவதால் ரூபா 29,800 இலாபம் கிடைத்துள்ளது.

விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றிச் சம்பளத்திட்டம்

அலுவலகம் நடவடிக்கை

மத்திய அரசாங்க விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றிச் சம்பளத் திட்ட உறுப்பினர்களின் குடும்ப விபரங்களைச் செவ்வை பார்ப்பதற்கு அனாதைகள் இளைப்பாற்றிச் சம்பள அலுவலகம் நடவடிக்கையெடுத்துள்ளது. உதவுநர்களுக்கு அவர்கள் பகுதி மூலமாகவோ நேரடியாகவோ இது தொடர்பாக சுற்று நிருபங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஆயினும், பெரும்பாலான சுற்று நிருபங்கள் பூரணப்படுத்தப்பட்டு இந்த அலுவலகத்துக்கு திருப்பி யனுப்பி வைக்கப்படவில்லை. இதன் காரணமாக பதிவுகளைப் பூரணப்படுத்தும் வேலைகள் ஸ்தம்பித்திருக்கின்றன. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றிச் சம்பள அலுவகைத்தில் பதியப்பட்டுள்ள உதவுநர்களின் குடும்ப விபரங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருப்பதால் இந்நிருபங்களைப் பெற்றுள்ள உதவுநர்கள் யாவரும் இவற்றைப் பூரணப்படுத்தி உடனடியாக இந்த அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்று விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றிச் சம்பள அலுவலகத்திலிருந்து விடுக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

இளம்பிள்ளை ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தடவையும் இந்நோய் தடைப்பாலை உட்கொள்வது அவசியமாகும். இதனால் அவர்கள் பெறும் நோயனுகாமற்றடைசெய்யும் சக்தி நீண்ட காலத்துக்கு அவர்களிடமிருக்கும். சில பிரதேசங்களில் நிலவிய பாதகமான காலநிலையின் காரணமாக சில பிள்ளைகள் கிடைத்த இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த—அதாவது நோய்த்தடைப்பாலைப் பெற—முடியாமற் போய்விட்டது. அவ்வாறான பிரதேசங்களில், தங்கள் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு இம்மருந்து கொடுப்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையத்துக்குச் சென்று முதல் தடவையாக இம்மருந்தை வாங்கிக் கொடுக்குமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவர்களுக்கு இம்மருந்தை இரண்டாவது தடவையாகக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். ஒரு தேசிய அடிப்படையில் இளம்பிள்ளைவாத நோயனுகாமற்றடைசெய்வதை இந்நாட்டில் மேற்கொள்வது இதுவே கடைசித் தடவையாக இருக்குமென்று இங்கு வலியுறுத்திக்கூறப்படுகிறது.

உடவளவைத் . . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இத்திட்டத்தின் முதலாவது ஆண்டு வேலைக்கான ரூபா 1,91,62,646 சமீபத்தில் வழங்கப்படும்.

ரூபா 2,36,11,840/– செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள அணைக்கட்டு வேலையையும் ஆற்றைத்திருப்பும் வேலையையும் கல்லோயா அபிவிருத்திச் சபை மேற்கொள்ள வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. விரைவில் இச் சபையின் பெயர் " ஆற்றுப்படுக்கை அபிவிருத்தித் திட்டம் " என மாற்றப்படும்.

இத்திட்ட வேலை பூராவும் இவ்வருடம் ஆரம்பித்து 10 வருட காலத்துக்கு நடைபெறும். இவ்வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் கோரப்படும்.

இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

8.7.63 தொடக்கம் 9.7.63 வரை

திங்கள்
ஜூலை 8

காலை
6.45 பாமாலை—
6.55 இறில்லதவ நற்சிந்தனை †
எஸ். ஜெபநேசன்
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 மூடர் இசை †
7.45 திரை இசை †
8.15 இஸ்லாமிய கீதம் †
8.30 ஒலிபரப்பு முடிவு

பகல்
12.00 சித்திரகானம் †
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 கதம்ப இசை †
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலை
5.00 **சிறுவர் பகுதி**—பிறந்தநின வாழ்த்துக்கள்
5.15 நிலைய ஒலிப்பதிவுகள் †
5.45 திரை இசை †
6.00 செய்திகள்
6.10 விலைவாசிகள்
6.15 **கிராம சஞ்சிகை**— தேசவளம், சாரணர் நிகழ்ச்சி
6.45 வயலின்—
7.00 நேயர் விருப்பம் †
7.30 ஜலதரங்கம்—சங்கிலோகபால சந்திரன்
8.00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—
உறுதுப் பாடல்கள் †
8.30 செய்தித் தொகுப்பு
8.45 பாட்டு—ஷெய்க் ஏ. ஜலால்
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 தமிழ்மூலம் சிங்களம் (மறுஒலிபரப்பு)
9.30 பாட்டு—மஹாராஜபுரம் லி. சந்தானம்
10.30 ஒலிபரப்பு முடிவு

செவ்வாய்
ஜூலை 9

காலை
6.45 உதய கீதம்
6.50 சைவ நற்சிந்தனை, க. இராமச்சந்திரா
6.55 இஸ்லாமிய நற்சிந்தனை, யூ. எல். தாவூத்
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 தேர்ந்த இசை
7.45 திரை இசை
8.15 இஸ்லாமிய கீதம்
8.30 ஒலிபரப்பு முடிவு

பகல்
12.00 சித்திரகானம்
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 கதம்ப இசை
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலை
5.00 **சிறுவர் பகுதி**—பிறந்தநின வாழ்த்துக்கள்
5.15 வரும் பயிர்
5.45 திரை இசை †
6.00 செய்திகள்
6.10 விலைவாசிகள்
6.15 **கிராம சஞ்சிகை**—உணவுப் பெருக்கம், இளைஞர் கமச்சங்கம்
6.45 புல்லாங்குழல்—
7.00 நேயர் விருப்பம்
7.30 " இருபது கேள்விகள் " 27 வது நிகழ்ச்சி, தயாரித்து நடத்துவர் " சாரு "
8.00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—நேயர் கேட்டவை (நிலைய ஒலிப்பதிவுகள்)
8.30 பேச்சு—இஸ்லாமியச் சமுதாய அமைப்பில் பள்ளிவாசல்களின் அந்தஸ்து, எம். ஐ. எல். எச். ஜமீல்
8.45 பாட்டு—எ.ஆர்.எம். இப்ருஹிம்
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 திரை கடந்த இசை
9.45 நாகசுரம்—ஆர். சுந்தரமூர்த்தி
10.30 ஒலிபரப்பு முடிவு

† இசைத்தட்டு ‡ நிலைய ஒலிப்பதிவு

சிரமதான வேலைத் திட்டங்கள்

சாதனைகள் பற்றிய ஒலிபரப்பு

இவ்வருடம் மார்ச் மாதக் கடைசி வாரத்தில் ஆரம்பமான பசிப் பிணி ஒழிப்பு வாரத்தில் தாங்கள் மேற்கொண்ட வேலைத் திட்டங்களின் சாதனைகளைப்பற்றி ஒவ்வொரு மாவட்ட அரசாங்க அதிபர்களும் தொண்டர் குழுக்களும் இலங்கை வானொலியில் ஒலிபரப்புதற்கு காணி அபிவிருத்திப் பகுதியின் தேசீய சேவைக் கிளை வானொலி, தகவற் பகுதியுடன்கூடி ஏற்பாடு செய்துவருகிறது.

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சீ. பீ. டி சில்வா அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க அரசாங்க அதிபர்கள் விவசாய, உணவு உற்பத்தித் துறைகளில் சிரமதான அடிப்படையில் பல்வேறு வேலைத் திட்டங்களை ஆரம்பித்தார்கள். காணி அபிவிருத்திப் பகுதிக்குக் கிடைத்துள்ள தகவல்களின் படி இவ் வேலைத்திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன. எனவே இவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டு நடாத்தும் பட்சத்தில் தேசீய பொருளாதாரம் யதார்த்தமான முறையில் விருத்தியடையும்.

உணவு, விவசாய உற்பத்தியைப் பெருக்குதற்கான தேசீய முயற்சியில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு காணி அமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்கு பெரும்பாலான மாவட்டங்களில் அரசாங்க அதிபர்கள், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், பாடசாலைகள் முதலியன மிகுந்த அக்கறை காட்டியுள்ளனர்.

ஆசிரிய இடமாற்றக் காரணங்கள்

பின்வருவனவற்றைத் தவிர்ந்த ஏனைய இடமாற்றங்கள் எதுவும் கல்விப் பகுதியால் இப்போது அனுமதிக்கப்படமாட்டாதென்று 26, ஜூன் 63 ல் இப் பகுதியால் வெளியிடப்பட்ட பத்திரிகை, வானொலிச் செய்தியொன்று கூறுகிறது :—

1. ஆசிரியர் பணியாற்றும் இடத்திலுள்ள மாவட்ட வைத்திய உத்தியோகத்தர் வழங்கிய வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை தாக்கல் செய்து, இடமாற்றங் கோரும் கடுமையான நோயாளிகள் ;
2. ஆசிரியையின் கணவர் அரசாங்க ஊழியரொருவராகவோ அன்றி அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றின் ஊழியரொருவராகவோ இருந்து புதியதொரு இடத்துக்கு இடமாற்றஞ் செய்யப்படுமிடத்து ;
3. பாடசாலைகளில் மேலதிகமான ஆசிரியர்கள் இருப்பதன் காரணமான சீராக்க வேண்டிய அவசியம் ஏற்படுமிடத்து.

மேற்கூறிய (1) ஆம் (2) ஆம் காரணங்கள் தவிர ஏனையவற்றைக்காட்டி இடமாற்றங்கோரும் விண்ணப்பங்களெதும் தலைமைக் காரியாலயத்தாலோ அன்றி பிராந்திய, மாவட்டக் காரியாலயங்களாலோ கவனிக்கப்படமாட்டா.

மேற்கூறிய காரணங்களைக் கொண்டு வரும் இடமாற்றங்களையே செய்யுமாறு உதவிக் கல்வி அதிபதிகளும் கல்வி அதிகாரிகளும் பணிக்கப்பட்டுள்ளனர்.

மலரும் மாலை...

(2 ம் பக்கத் தொடர்)

வெள்ளி நாரினால் கட்டப்பெற்ற பொற் பூங்கொத்து வழங்குவர். இசைவாணர், மலர்களும், மாலைகளும் அணிந்து வந்ததுமன்றி தம் யாழ் முதலிய இசைக் கருவிகட்கும் அவற்றினைச் சூட்டினர்.

அகவொழுக்கத்திற்குத் தமிழ் மக்கள் மலர்களையும் மாலைகளையும் பயன் படுத்தியவாறே, புறவொழுக்கத்திற்கும் அவைகளை மிகுதியாகப் பயன்படுத்தினர். போரின் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு பூ அடையாளமாக விளங்கியது.

பண்டைத் தமிழ் மக்கள் மலர்களை அகவொழுக்கத்திற்குப் பயன் படுத்திய செயல் அத்துணை வியப்பன்று. அவற்றினைப் புறவொழுக்கத்திற்குப் பயன்படுத்திய செயலே பெரு வியப்பாகும். தமிழ் வீரர் போருக்குரிய மலர்களையும் மாலைகளையும் புனைந்து சென்ற காட்சியைப் புலவர்கள் பலவாறு புகழ்ந்துரைத்துள்ளனர். வெட்சி மாலை அணிந்து செல்லும் வீரர், " செவ்வானம் செல்வது போல் செல்கின்றார் " என்றார் ஒரு புலவர்.

மேல்நாடுகளில் ரோசா மலர், லிலி மலர், எருக்கிலை மலர் அரசர்க்கும், அவர் மரபினருக்கும் அடையாளப் பூக்களாக வழங்கின. தமிழ் மன்னர்க்கும் அடையாளப் பூக்கள் இருந்தன. சேர மன்னர்க்குப் பனம் பூவும், சோழ மன்னர்கு ஆத்திப் பூவும், பாண்டிய மன்னர்க்கு வேப்பம் பூவும் அடையாளம். போருக்குச் செல்லும் மன்னர் போர் மாலை புனைவதுடன் தம் மரபிற்குரிய மாலையும் புனைந்து செல்வர்.

பழந் தமிழ் மக்கள் எவ்விதம் காதணிகளைப் பயன்படுத்தினர் என்பதற்கு இன்றும் அவர் மரபினர் அணியும் அணிகலன்களின் பெயர்கள் சான்றாகின்றன. தோடு, அரசிலை, குழை, ஓலை, கொந்தள வோலை, தாலிக்கொடி என அணிகலன்களின் பெயர் சொல்லும்பொழுது இவ்வணிகலன்கள் முதலில் ஓலையும் குழையுமாகவே இருந்திருத்தல் வேண்டும் எனக் கருத இடமுண்டாகின்றது. இயற்கையுடன் இசைந்து வாழ்ந்த நம் முன்னோர் ஆம்பற் கொடியையும், பனையோலையையும், மற்றும் பல இலைகளையும் கொண்டே தம்மை அணிசெய்துகொண்டனர். இன்றும் அவர்களுடைய கட்டில்கள் நாற்காலிகள் முதலிய பொருட்கள் செடி, கொடி, இலைகளின் வடிவங்களைக் காட்டுகின்றன.

சங்க இலக்கியத்தில் அகத்துறைக்கும் புறத்துறைக்கும் உவமிக்கப்படும் மலர்களையும் மாலைகளையும் இதுகாறும் நன்கு ஆராய்ந்தார் அல்லர் தமிழ் அறிஞர். அவற்றினை விரிவாக ஆராய்ந்து இன்னின்ன பூ இன்னின்ன பொருளைக் குறிக்குமென அறிந்து, பண்டைச் செய்யுட்களை இன்னும் பல்லோர் பண்மடங்கு சுவைநுகரச் செய்வதே தமிழ் மொழியும் செடி நூலும் கற்ற அறிஞர்களின் பெருங்கடமை ஆகும்.

உங்கள் பணத்துக்கு
அதிகம்
கைத்தொழிற் பொருட்காட்சி
சுவீப்
210 பரிசுகள்
ஒவ்வொரு மாதமும்
1963, பெப்ருவரி மாதம் 14 ந் திகதி
துவக்கம் மாதம் இருமுறை
சீட்டிழுப்பு
ரிக்கற் ஒன்றை வாங்கி
பரிசு ஒன்றைப் பெறுங்கள்

இலங்கை, வாழைச்சேனை ரான்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 10550—5,008 (6/63)